காதலெனுந் தீவினிலே



Pax Ravichandra

+94763223960


pax.ravichandra@gmail.com

20-09-2024

காதலெனும் தீவினிலே

கண்டதும் மனம் காதல் காதல் எனத் தவிக்க
தேனுண்ட வண்டாய் மனம் ரீங்காரம் இசைக்க,
தேவதையோ, மோகினியோ எனப் பேரழகு-என்
இதயவானில் உலாவந்த கன்னியோ தேன் நிலவு





கண்ணோக்க விண்ணோக்கிய மங்கை, பூ விழிகளால்
என்னை மொய்த்த நங்கை, கண்ணும்
கண்ணும் பேசிட நிலம் நோக்கி நாணிய மடந்தை
புன்னகையால் என்னைச் சூடிய தேவ கங்கை

அழகோ விழிகள் சுவைக்க அமுதம்
சுவாசம் மயங்கப் மேனி வாசமோ பரிமளம்
அறிவு மயங்க கலைமகளோ? என்தன்
இதயத்தை ஆட்டுவிக்கும் கன்னி திருமகளோ?

மை எழுதிய விழிகளில் மையல் நிலைக்க
தையலாள் மொழியில் அஞ்சுகம் கொஞ்சிப் பேச
நாளும் தேன்நிலவு, ரதியும், மதனுமாய்
ஒன்றிணைந்த மணவாழ்வோ வானவர் உலகு





காலம் போனது தெரியாமல், பெற்றோர்
என்ற பெருநிலையில் ஈன்ற பிள்ளை
அம்மா, அப்பா என்றழைத்த மழலை
பேரின்ப உலகில் எங்கள் இன்ப நிலை

தூக்கித் தாலாட்டி கொஞ்சி மகிழ்ந்த இன்பம்,
தவழ்ந்து, நடை பயில பெற்றோர் மனதில் சொல்லொண்ணாப்
பேரின்பம், இறை தந்த வாழ்வைப் போற்றிய உள்ளங்கள்,
எல்லாப் புகழும் இறைவா உன்கே என்ற இன்பங்கள்

கட்டியணைத்து கார்குழலில் மலர் சூடி, இடை நெரித்து,
வளை குலுங்க, நாணம் திரையிட, கன்னத்திலும் கனிவாயிலும்
முத்தப் பூச்சூடி போய்வருகிறேன் கண்ணே பத்திரம்
எனச் சொல்லி நாளும் வேலை செல்லும் கண்ணாளன்

கொழும்பில் வேலை, நாளும் பிரயாணிகளால் நிறைந்து
வழியும் ரயில் தொங்கிப் பயணிக்கும் ஆபத்தான நிலை,
அதுவே பழகிட குதூகலமான நிலை, ஒரு நாள் தலை
கம்பத்தில் மோதிட வாழ்வோ திசைமாறிய கொடுமை

கண்ணன் வருவான் என வழிமேல் விழிவைத்துக் காத்திருக்க,
நேரம் கடந்திட, காரிருள் சூழ்ந்திட, ஒலித்த தொலைபேசி
மணியோசை, இடியாய் தாக்கிய சேதியிலே கணவர் ஆபத்தான
நிலையில் அரச வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில்



ஒரு பொழுது இன்பவனமான வாழ்வோ, மறுபொழுது
எரி நரகானது, நினைவிழந்த நிலையில் கட்டிலோடு
கணவன் வாழ்வோ பரிதாபமானது, மனைவி வாழ்வோ
வாடுமுன் புழுதியில் விழந்த வண்ணப் பூமாலையானது



பாட்டி, தாத்தாவோடு வளர்ந்திடும் குழந்தைக்கு
பெற்றோர் அன்பு எட்டாத வான் நிலவானது
நினைவிழந்து நடமாடமுடியாத கணவனை எண்ணிட
கானல் நீரான வாழ்வு மனதைக் கலங்கடித்தது

மலமும், மூத்திரமும் நாளும் அள்ளி, உணவூட்டி குழந்தைபோல்
பராமரிக்கும் மங்கை நெஞ்சில் மாறாத சோகம், கலைந்த
வண்ணக் கனவில் கலையாத துயரம், காதலும், கல்வாரிச் சுமையாக
இயேசு பட்ட துயரை நாளும் வஞ்சி நெஞ்சம் படும் அவலம்



புன்னகை மறந்தாள், பூ மறந்தாள்.,அறுசுவை மறந்தாள்
பூவிழிகளுக்கு அஞ்சனம் பூச மறந்தாள்,
பொன்னும், மணியும், பட்டும் மறந்தாள்-பூவை
கணவன் சுகம் பெற நாளும் இறைவனை இரந்தாள்



கண் விழிப்பார் அன்புக் கணவர், காதல் மொழி
பகிர்வார் காதலர், பட்ட துன்பம் எல்லாம்
பஞ்சாய்ப் பறந்திடும், காதல் சிறகை காற்றில்
விரித்தாடத் துடித்த பாவை, கண்ணீரில் பூத்த தாமரை



கணவன் முகம் பார்த்து என் முகம் பார்ப்பார்
என்ற ஏங்கிய பேதை, செல்லும் நாட்களை எண்ணி
மனம் சோர, நாட்கள், வாரங்களாக, மாதங்களாக,
ஆண்டுகளாக நம்பிக்கை நலிந்த பெண்மை



காலம் போயிட ஒரு நாள் தூக்கத்தில் கணவன் மாண்டிட,
ஓ எனப் புலம்பி அழுத பேதை, கர்த்தர் துணை நிற்பார்,
கண்ணீரைத் துடைப்பார் எல்லாம் மாறும் உலகில் இதுவும்
மாறும் ஆறுதல் மொழிந்த இளம் போதகனோ அழகன்

பசுத்தோல் போர்த்திய ஓநாய் அறியாத பேதை
துப்பிய வார்த்தைகளோ துன்பத்தில் போதை-மதமே
மனுமகனைக் கொன்ற உண்மையை அறியாத கோதை

தந்தை தாய் கூடி ஜெபிக்க கூட்டி வந்த போதகன்
ஒரு வட்டமாய் நின்று ஜெபிக்க கைகோர்த்த பரிசேயன்
மகளோடு ஒரு கரம், போதகரோடு ஒரு கரம் என்றாக
கூடி ஜெபிக்கையில் மங்கை கரத்தை தடவிய காமுகன்

ஒரு நாள் நீராடுகையில் ஒலித்த அழைப்பு மணி
அவசரமாய் கதவைத் திறக்க வாசலில் காதல் ஒலி
ஈரக் கால்கள் சறுக்கிட நங்கையைத் தாங்கிடப் பிடித்த பிடி
சுரம் கெட்டுப் போன மங்கை வாழ்வில் காமத்தின் நாத ஒலி



பெண்மையின் அழகு போதகனுக்கு விருந்தானது
அடங்கிக் கிடந்த காமம் பேதைக்கு பலவீனமானது
பஞ்சும் நெருப்பும் சேரப் பற்றிய காதற் காமம்,
பல மாதமாய் தொடர்ந்த பஞ்சணைச் சுகமானது



மனந்தெளிந்து வாழத் துணிந்த மங்கை
போதகனை கைத்தலம் பற்றத் துடித்த பேதை
மணமான போதகனோ இரு பிள்ளைகளுக்குத் தந்தை,
மரத்தால் விழுந்தவளை மாடு முட்டிய கதை வேதனை

தாய்மை உற்ற பெண்மை, தன்னைக் காக்க
வழி அறியாத மென்மை, ஊரும், உறவும் அறிந்தால்
காறித் துப்பும், கனத்த இதயம் அழுதது, நாணத் தாளை
முறித்த காமக் கோடாரி கேட்பாரற்றுக் கிடந்தது



உணர்வை அறிவால் வெல்ல முடியாத பருவத்தில்
கைமை, காமத்தை வென்ற முனிகளும் இல்லை,
புண்ணான மனதை ஆற்ற மருந்தில்லை
தேறுதல் சொன்ன ஊழியனோ காமக் கோழை

ஈர விழிகள் சிலுவையில் தொங்கும் இயேசுவை நோக்க,
துடிக்கும் இதயம் காக்க, காக்க என்றே கூவி அமைதியை
இரஞ்ச, பாவி என்னையும் இயேசு மன்னிப்பார் நம்பிய பேதை
காமமோ, வெல்ல முடியாத போதை, ஏமாந்த பேதை

காம சுகத்தில் இன்பம் கண்ட பேதமை ஏமாந்துபோனது,
ஆறாத் துயரில் மானத்தைக் காக்க ஏதுவழி புரியாத நிலையில்
மனவுழற்ச்சிக்குள்ளான பெண்மை தூக்கத்தை இழந்தது
துக்கத்தில் நிலைத்த தாய்மை தற்கொலைக்குத் துணிந்தது

என் தேவனே என் தேவனே ஏன்
என்னைக் கைநெகிழ்ந்தீர்-அபலையின் கதறலானது
தன்னை மாய்த்து மானம் காக்க தாயெடுத்த முடிபு
சேயொ வாழ்நாள் அநாதையான துயரமானது

உறவுகளையும், ஊரையும் அதிர வைத்த செய்தி,
மனநலம் பாதிப்புற்ற பெண்மை தன்னை
மாய்த்ததே உண்மை என உரைத்த வைத்தியர்
தாய்மையை மறைத்து தாயைக் காத்த பெருமையானது

உத்தரத்தில் தூக்கிட்டு தன்னை மாய்த்த பெண்மை
அந்தரத்தில் ஆடிய பாதங்களில் என் வாழ்வில்
ஏது நிம்மதி என்ற கேள்வி, அருள்வாய் இறைவா
உன் அமைதி, செவ்விழிகளில் கசியும் குருதி





பதினெட்டில் மணமுடித்து , இருபத்தி நான்கில்
மாங்கலயம் இழந்த பெண்மை, இடையில் பூண்ட
இன்பத் தாய்மை, நடைப்பிணமான வாழ்வில், நாதியற்ற
பெண்ணை நாசமாக்கியவன் கழுத்தில் சிலுவை

மஞ்சம் பகிர்ந்தவன் நெஞ்சம் பகிரவில்லை
வழியும், உண்மையும். வாழ்வும் “நானே”
வாசித்தவன், குருடனுக்கு குருடன் வழிகாட்டி
கைமையை பாதாளத்தில் வீழ்த்திய கொடுமை

ஒரு முறை நொருங்கிய உள்ளம், மறுமுறையும்
நொருங்கிட, உத்தரத்தில் தொங்கிய பெண்மை,
உதரத்திலோ குழந்தை, உள்ளத்திலோ
எல்லாம் முடிந்தது என்ற நிம்மதி



துன்புற்ற உள்ளம், துயர் போக்கிடத் தோள் சாய,
இன்புற்ற உள்ளம் இறை வார்த்தையைப் புறந்தள்ளி
மஞ்சம் பகிர்ந்திட, கருவுற்ற அம்மை, அநாதரவான
நிலையில் துன்புறும் இயேசுவாய்ப் பெண்மை

ஆறாத மனக்காயம் ஆறிட, அன்பைத்
தேடிய மங்கை, பசுத்தோல் போர்த்திய ஓநாய்கள்
வாழும் உலகில், விவிலியம் ஏந்தி, சிலுவை தரித்த
போதகனோ கள்வன், பெண்மையோ பலியாடு

காமனை வெல்லப் நுனிப்புல் மேயும் போதகன்
ஒன்றும் ஞானியல்ல, காமத்தில் விழுந்த பெண் மனதில்
பருவத்தின் சோதனை, தீர்ப்பிடத் தகுதி யாருக்குமில்லை
விபச்சாரியை மன்னித்த இயேசு அன்பின் உயர் நிலை

ஆவியோ ஊக்கமுள்ளது, மாமிசமோ பலவீனமானது
நொருங்குற்ற நெஞ்சுக்கு காதல் ஆறுதலானது
நம்பியவளைக் சூறையாடிய ஓநாய்க்கு வேதம்
வியாபாரமானது, இயேசு ஜீவிக்கிறார் கோஷமானது

வந்ததும் உன்னால், வாழ்வதும் உன்னால், மடிந்து வருவதும்
உன்னால், வாழும் உலகோ சத்திரம், புரிந்ததும் உன்னால்
மனம் தேடும் நிம்மதியோ உன் சன்னிதி-இறைமகனே
மன்னித்து பேதையை ஏற்பாய் உன் திருவடி வேண்டுதலானது







நீ தந்த இன்ப வாழ்வுக்காய், நாளும் நன்றி
சொன்ன மங்கை, பின்னாளில் வந்த சோகத்தில்
அழுது புலம்பிட, பொன், பொருள் தராத நிம்மதி
காமத்தில் கண்டதோ நிந்தை அவமானமான சங்கதி

இன்றில்லையேல் நாளை மரணம்
வாழ்வதனால் கண்டதோ ஏழ்கடலின் சோகம்
என் குழந்தை மானத்தோடு வாழ, மரணமே
பாதை, பேதை நான் படிக்கும் கீதை

காமத்திற்கு ஒழுக்கம் தெரியாது, காமத்தை வெல்லக்
கடவுள் தந்த துணையும் அவலமாய் மாண்ட நிலையானது
யாரையும் குற்றம் சொல்ல அபலை விரும்பவில்லை, என்
குற்றம் பொறுப்பாய் இறைவா ஏழை ஜெபமானது



அன்று சிலுவையில் நீ, உம்மைக் காட்டிக் கொடுத்த
சீடனோ காட்டத்தி மரத்தில் தூக்கில், இன்றும் சிலுவையில்
மனுமகனே நீர், உம்மைக் காட்டிக் கொடுத்த துரோகி நானோ
தூக்கில் தொங்குகிறேன், அமைதியை இரஞ்சுகிறேன்



இன்றில்லையேல் நிச்சயம் ஒருநாள் மரணம்
எல்லா உயிர்களும் நாளும் செல்லும் பயணம்
கடலைத் தேடும் நதியாய் மனித வாழ்க்கை
அமைதியைத் தேடி தூக்கில் தொங்கிடும் என் யாக்கை

கோடி மனிதுர் துன்பம் செய்ய நினைத்தால் என்ன?
இறை சித்தமே நிறைவேறும், எல்லாம் நின் செயல்
எனப் புரிந்தவருக்கு வாழ்க்கை ஒரு விளையாட்டு
மற்றவருக்கோ இருமையில் அல்லாடும் நிலைப்பாடு



மனம் உற்ற பெருங்காயத்திற்கு காமம்
மருந்தென ஏமாந்து நம்பியது தப்பானது,
நரகவாழ்கைக்கு மரணம் முடிவானது? மங்கைக்கு
இயேசு மன்னிப்பார் மாறாத நம்பிக்கையானது

இன்பமே சூழ்க-எல்லோரும் நலமே வாழ்க
எல்லாப் புகழும் இறைவனுக்கே
Pax Ravichandra-19-09-2024